*கவனிக்க.- 2018.10.05 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2093 - 2018 ඔක්තෝබර් 12 වැනි සිකුරාදා - 2018.10.12

*2093 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV (அ) - மாகாணசபை

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | 1580 |
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2018, நவெம்பர் மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, ஒற்றோபர் மாதம் 19 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1579 - B81458 - 5,403 (2018/10)

# துணை விதிகள்

**ருவன்வல்லை பிரதேச சபை**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 மற்றும் 126 ஆம் பிரிவுகளின் பிரகாரம் கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரங்களுக்கேற்ப சப்பிரகமுவ மாகாண சபை அதிகார எல்லையில் ருவன்வல்லை பிரதேச சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள துணை விதி, பிரதேச சபைகள் சட்டத்தின் 123 ஆம் பிரிவின் மூலம் என் மீது கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கேற்ப மாகாண சபையின் ஆளுநர் ஆகிய என்னால் அங்கீகரிக்கப்பட்டதாக இத்தால் பிரகடனப்படுத்தப்படுகின்றது.*

*நிலூக்கா ஏக்கநாயக்க,*
*ஆளுநர்,*
*சப்பிரகமுவ மாகாணம்.*

*சப்பிரகமுவ மாகாண மாகாண சபை,*
*2018, செத்தெம்பர் 11.*

**தகன நிலையத்தை நடாத்திச் செல்லுதல் தொடர்பான துணை விதி**

*துணை விதியின் பெயர்.*

1. தகன நிலையத்தினை ஒழுங்குமுறைப்படுத்தல், கட்டுப்படுத்தல் மற்றும் கட்டணம் அறவிடல் பற்றிய துணை விதி.

*முகவுரை / முன்னுரை.*

2. அதிகார எல்லை பொது மக்களின் வசதி மற்றும் நலன்புரி மற்றும் அனைத்து வசதிகளையும் பாதுகாத்தலின் கீழ் தகன நிலையத்தினை ஒழுங்குமுறைப்படுத்தல், கட்டுப்படுத்தல் மற்றும் கட்டணம் அறவிடல் தொடர்பாக இத்துணை விதிகளின் உள்ளடக்கமாகும்.

*நோக்கம்.*

3. இத்துணை விதியினை விதித்தலின் நோக்கமானது அதிகார எல்லையில் பொது மக்களின் வசதிகள் மற்றும் நலன்புரி உள்ளடங்கலாக அதனுடன் தொடர்பான ஏனைய அனைத்து நிலைமைகளையும் ஒழுங்குமுறைப்படுத்தல், கட்டுப்படுத்தல் மற்றும் நிருவகித்தல் ஆகும்.

*துணை விதியினைத் தொகுப்பதற்கான சட்டரீதியான ஏற்பாடுகள்.*

4. 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 (1) ஆம் பிரிவின் கீழ் சபைக்கு கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரங்களிற்கேற்ப இத்துணை விதிகள் தொகுக்கப்பட்டுள்ளன.

*நிறைவேற்ற வேண்டிய பணிகள்.*

5. (அ) பூதவுடலொன்றை தகனம் செய்வதற்கு அறவிடப்படும் கட்டணங்கள் இங்கு முதலாம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வகைப்படுத்தலுக்கு அமைவாக விதிக்கப்படலாம்.

(ஆ) பூதவுடலொன்றைத் தகனம் செய்வதற்கு அறவிடப்படும் கட்டணம் ருவன்வல்லை பிரதேச சபையின் பிரேரணை வழிமொழிதல் மூலமாக விதிக்கப்பட முடியுமென்பதோடு அவ்வாறான பிரேரணை வழிமொழிதல் மூலமாக காலத்திற்குக் காலம் திருத்தம் செய்ய முடியும்.

(இ) மேலே "(ஆ)" பந்தியின் கீழ் விதிக்கப்படுகின்ற அல்லது காலத்திற்குக் காலம் திருத்தம் செய்யப்படும் கட்டணங்கள், வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதோடு தகன நிலையத்தை ஒதுக்கிக் கொள்வதற்கான விண்ணப்பப்பத்திரங்களைப் பொறுப்பேற்கும் இடத்திலும் தகன நிலையத்திலும் தெளிவாகப் புலப்படக்கூடிய இடத்தில் காட்சிக்கு வைக்கப்படுதலும் வேண்டும்.

6. இரண்டாவது துணை விதியில் குறிப்பிடப்பட்டுள்ள அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கும் (இதனகத்துப்பின்னர் "விண்ணப்பதாரி" என அறியப்படும்) எவரேனும் ஆள், இங்கு கீழே காட்டப்பட்டுள்ள பதிவேட்டுடன் இங்கு இரண்டாவது அட்டவணைக்கு அமைய தயாரிக்கப்பட்ட

விண்ணப்பப்பத்திரத்தை தவிசாளர் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

அ. மரணமடைந்தவருக்கும் விண்ணப்பதாரிக்கும் இடையிலான தொடர்பினை உறுதி செய்து கொள்ளும் பொருட்டு -

(i) விண்ணப்பதாரியின் தேசிய ஆள் அடையாளஅட்டை;
(ii) மரணமடைந்தவரின் பிறப்புச் சான்றிதழ் (இருப்பின்) அல்லது தேசிய ஆள் அடையாள அட்டை;
(iii) மரணமடைந்தவர் வசித்த பிரிவின் கிராம அலுவலரால் வழங்கப்பட்ட சான்றிதழ்.

ஆ. மரணமடைந்தவரின் மரணம் சம்பந்தமாக பிறப்பு மற்றும் மரணப் பதிவுச் சட்டத்தின் விதிகளின் பிரகாரம் திடீர் மரண விசாரணையாளர் மற்றும் பிறப்பு, இறப்பு பதிவாளர்களினால் சான்றுப்படுத்தப்பட்டு பின்வரும் ஆவணங்கள் மூலம் முன்வைக்கப்படும் மரணங்கள் சம்பந்தமாக மட்டும் தகன நிலையம் ஒதுக்கப்பட முடியுமாக இருக்கும் :-

(i) B 18 - மரணப் பரிசோதகரின் சான்றிதழ் (39) (1) 41 (1) (உ) உறுப்புரை;
(ii) B 16 - மரண அறிவித்தல் சான்றிதழ் (41) (1) (அ) உறுப்புரை;
(iii) B 20 - மரணப் பதிவுச் சான்றிதழ் (42) (1) (ஆ) உறுப்புரை;
(iv) B 22 - இறந்தவரின் பிறப்புச் சான்றிதழ் (43) (1) (எ) உறுப்புரை;
(v) B 22 - இறந்தவரின் மரணச் சான்றிதழ்.

7. சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பப்பத்திரத்திற்கு அமைய ஏதேனும் பூதவுடலொன்று தகனம் செய்வதற்குப் பொறுப்பேற்கத் தீர்மானிக்கப்படுமாயின், முதலாம் அட்டவணைக்கு ஏற்ப விதிக்கப்பட்ட உரிய கட்டணங்களை அறவிட்ட பின்னர், தவிசாளர் அல்லது அதிகாரம் பெற்ற அலுவலரினால் அதற்காக தயாரிக்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தை விண்ணப்பதாரருக்கு வழங்குதல் வேண்டும். அத்தகைய அனுமதிப்பத்திரத்திற்கு அமைய தகனம் செய்வதற்குரிய பூதவுடலை தகன நிலையப் பொறுப்பாளரிடம் கொண்டுவந்து ஒப்படைக்க வேண்டிய தினம் மற்றும் நேரம் அத்தகைய அனுமதிப்பத்திரத்தில் தெளிவாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

8. ஏதேனும் காரணத்தின் பேரில் தகனம் செய்வதற்காக பூதவுடலைப் பொறுப்பேற்காவிடின், தவிசாளர் அல்லது அதிகாரம் பெற்ற அலுவலர் அதற்கேதுவாக அமைந்த காரணங்களுடன் அதுபற்றி உடனடியாக விண்ணப்பதாரருக்கு எழுத்துமூலம் அறிவித்தல் வேண்டும்.

9. வாரத்தின் எல்லா நாட்களிலும் முற்பகல் 7.00 மணியிலிருந்து பிற்பகல் 8.00 மணி வரையான கால எல்லையினுள் தகனம் செய்வதற்காக பூதவுடல்களைப் பொறுப்பேற்றல் மற்றும் தகனம் செய்தல் முடியும்.

10. ஒரே தினத்தில் பல பூதவுடல்களை தகனம் செய்வதற்காக விண்ணப்பப்பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பமொன்றில், அதற்காக ஒதுக்கிக்கொள்ளப்பட்ட குறித்த நேரத்தை விடத் தாமதமாக தகனம் செய்யுமிடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டால் உரிய நேரத்திற்கு சமுகமளித்தவர்களுக்கு சந்தர்ப்பத்தை வழங்கியதன் பின் தாமதமாகி வந்தவர்களின் பூதவுடல்களை தகனம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

11. வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தில் காட்டப்பட்டுள்ள நேரத்தில் அல்லது அதற்கு முன்னர் பூதவுடலை தகன நிலைய பொறுப்பாளரிடம் கையளித்தல் வேண்டும். அத்தகைய நேரத்தில் பூதவுடலைக் கையளிக்க தாமதமானதன் காரணமாக விண்ணப்பதாரி அல்லது மரணமடைந்தவரின் உரிமையுள்ள வேறு எவரேனும் ஆளுக்கு ஏற்படும் ஏதேனும் வசதியீனம் அல்லது நட்டம் சம்பந்தமாக ருவன்வல்லை பிரதேச சபைத் தவிசாளர் அல்லது அதிகாரம் பெற்ற அலுவலர் வகைப்பொறுப்புக்கு கட்டுப்படல் ஆகாது.

12. அனைத்து தகன நிலையங்களிலும் தகனம் செய்யப்பட்ட ஒவ்வொரு பூதவுடல் தொடர்பாக III ஆம் அட்டவணைக்கு அமைவாக தயாரிக்கப்பட்ட பதிவேடொன்று தகன நிலையத்தின் பொறுப்பாளரால் பேணப்பட்டு வருதல் வேண்டும்.

13.(அ) ஒவ்வொரு பூதவுடலும் தகனம் செய்யப்பட்டதன் பின் அஸ்தியை வைப்புச் செய்வதற்காக பெயர் மற்றும் முகவரி எழுதப்பட்ட பாத்திரமொன்று வழங்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன், ஒவ்வொரு பூதவுடலும் தகனம் செய்யப்பட்டு எழுபத்திரண்டு மணித்தியாலங்கள் கழிவதற்கு முன்னர் விண்ணப்பதாரியால் அல்லது அவரின் அதிகாரம் பெற்ற பிரதிநிதி ஒருவரால் குறித்த பூதவுடலின் அஸ்தி பொறுப்பேற்கப்படல் வேண்டும்.

(ஆ) அவ்வாறிருந்தும் விண்ணப்பதாரியின் எழுத்துமூலமான வேண்டுகோளுக்கிணங்க தவிசாளர் அல்லது அதிகாரம் பெற்ற அலுவலரினால் குறித்த அஸ்தியினை தகன நிலையப் பொறுப்பாளரின் பொறுப்பில் வைத்துக் கொள்ளும் கால எல்லையை நீடிக்கலாம்.

(இ) (ஆ) பந்தியின் கீழ் அஸ்தி தகன நிலைய பொறுப்பாளரின் பொறுப்பில் வைத்திருப் பதற்கு நீடிக்கப்பட்ட காலம், தகனம் செய்யப்பட்ட தினத்திலிருந்து இரு வாரங்களை விஞ்சாதிருத்தல் வேண்டும்.

(ஈ) அவ்வாறு அஸ்தி அப்புறப்படுத்துவதற்கு வழங்கப்பட்ட காலம் முடிவுற்ற பின்வரும் எடுத்துச் செல்லப்படாத அஸ்தியை அகற்றுவதற்கு பிரதேச சபை தவிசாளருக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தருக்கு அல்லது தகன நிலைய பொறுப்பாளருக்கு அதிகாரம் இருத்தல் வேண்டும்.

ஆற்றக்கூடாத பணிகள்.

14. (அ) தவிசாளர் அல்லது அதிகாரம் பெற்ற அலுவலர் ஒருவரினால் வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரமொன்றின்றி ருவன்வல்லை பிரதேச சபைக்கு உரித்தான எந்த தகனம் செய்யுமிடத்தில் எந்தப் பூதவுடலையும் தகனம் செய்தல் கூடாது.

(ஆ) இறந்துபோன எவரினதும் மரணம் சம்பந்தமாக 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை சட்டத்தின் கீழ் நீதிவான் அல்லது திடீர் மரண பரிசோதகரால் விசாரணை நடாத்தப்பட்டு, அத்தகைய விசாரணையின் முடிவில் பூதவுடலைத் தகனம் செய்வதற்கு அத்தகைய நீதிவான் அல்லது திடீர் மரண பரிசோதகரால் அனுமதி அளிக்கப்பட்டிருந்தாலொழிய, அத்தகைய பூதவுடலை தகனம் செய்வதற்காகப் பொறுப்பேற்கவோ அல்லது தகனம் செய்வதற்கோ தவிசாளரால் அல்லது அதிகாரம் பெற்ற அலுவலரால் அனுமதிப்பத்திரம் விநியோகித்தல் ஆகாது.

(இ) மரணித்த ஒரு நபரின் இறப்புச் சான்றிதழில் 7 ஆம் நிரலில் "மரணித்தற்கான காரணம் மற்றும் நல்லடக்கம் அல்லது தகனம் செய்த இடம்" எனுமிடத்தில் ருவன்வல்லை பிரதேச சபையின் சம்பந்தப்பட்ட தகனம் செய்யுமிடத்தின் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தாலன்றி குறித்த பூதவுடலை தகனம் செய்வதற்கு பொறுபபேற்றல் அல்லது தகனம் செய்வதற்கு அனுமதிப்பத்திரமொன்றை வழங்குதல் தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் மேற்கொள்ளப்படுதல் கூடாது.

15. (அ) ஏதேனும் தகன நிலையத்தின், தகன கூடத்தில் சடலம் வைக்கப்பட்டு அதன் பாதுகாப்பு கதவுகள் மூடப்பட்ட பின்னர் கூடத்தின் மூடப்பட்ட பகுதிக்கு ஒதுக்கப்பட்டுள்ள பாகத்தினுள் தகன நிலைய பொறுப்பாளர் அல்லது அவரின் உதவியாளர் தவிர்ந்த வேறு எவரேனும் ஆள் உட்பிரவேசித்தல் ஆகாது.

(ஆ) தவிசாளர் அல்லது அதிகாரம் பெற்ற அலுவலர் அல்லது தகன நிலைய பொறுப்பாளரின் அனுமதியின்றி எவரும் தகன நிலைய வளவினுள் பிரவேசித்தல் ஆகாது.

(இ) (ஆ) பந்தியில் எவ்வாறு குறிப்பிடப்பட்டிருப்பினும் -

(i) பூதவுடலைத் தகனம் செய்வதற்கு எவரேனும் ஒரு நபர் அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுள்ளவிடத்து பூதவுடலைத் தகனம் செய்வதற்காக கையளிப்பதற்கு அவர் அல்லது அவரின் அதிகாரம் பெற்ற ஆளுடன் அத்தகைய சந்தர்ப்பத்தில் பங்குகொள்ளும் வேறு எவரேனும் ஆள் அல்லது ஆட்கள் மற்றும்

(ii) தகனம் செய்யப்பட்ட ஏதேனும் பூதவுடலின் அஸ்தியைப் பொறுப்பேற்க உரிய தினம் அல்லது அத்தினத்திற்கு முன்னர், அனுமதிப்பத்திரத்தினைப் பெற்றுள்ளவர் அல்லது அவரின் பிரதிநிதியுடன் வருகைதரும் வேறு எவரேனும் ஆள் அல்லது ஆட்கள் தகன நிலைய வளவினுள் பிரவேசிப்பதற்கு அனுமதியைப் பெற்றுக்கொண்டுள்ள ஆட்களும் எனக் கருதப்படல் வேண்டும்.

16. ஏதேனும் தகன நிலைய வளவினுள் -

(அ) அமைதியைக் குலைக்கும் விதத்தில் நடந்துகொள்ளல்.

(ஆ) தகன நிலைய வளவினுள் உள்ள ருவன்வல்லை பிரதேச சபைக்குச் சொந்தமான ஆதனங்களுக்கு சேதமேற்படுத்தல் அல்லது அவ்வாறு செய்வதற்கு முற்படுதல்.

(இ) தகன நிலையத்தின் பொறுப்பாளரின் அல்லது அவருடைய எவரேனும் உதவியாளரின் கடமைகளுக்குத் தடை ஏற்படுத்தல்.

(ஈ) தகன நிலைய வளவிற்குள் ஏதேனும் அலங்கரிப்புகளைச் செய்தல் அல்லது அறிவித்தல்களை ஒட்டுதல் ஆகாது.

(உ) தகன நிலையத்தினை ஒதுக்கீடு செய்கின்ற ஒருவரினால் ஏதேனும் ஒரு சொத்திற்கு அல்லது கட்டடமொன்றிற்கு அல்லது உபகரணத்திற்கு நட்டமொன்று ஏற்படுத்தப்பட்டால் தவிசாளர் விதிக்கின்ற மதிப்பீட்டுப் பெறுமதியினைச் செலுத்துவதற்கு தகன நிலையத்தினை ஒதுக்கீடு செய்பவர் ஒப்புக்கொள்ளுதல் வேண்டும்.

17. சபையில் பணியாற்றிய அல்லது தற்போது பணியாற்றுகின்ற தவிசாளரொருவரின், உப தலைவ ரொருவரின், பிரதேச சபை அங்கத்தவரொருவரின் அல்லது சபையின் ஊழியர் ஒருவரின் பூதவுடலொன்றை தகனம் செய்வதற்காக கட்டணம் அறவிடப்படமாட்டாது.

உள்ளூராட்சி அமைப்பின் பொறுப்புக்கள்

18. பூதவுடலைத் தகனம் செய்வதற்கு அனுமதிப்பத்திரம் கோரி சமர்ப்பிக்கும் விண்ணப்பப்பத்திரத்தின் பேரில் அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்படின், அவ்வாறான விண்ணப்பப்பத்திரம் கிடைக்கப்பெறும் வரிசைக் கிரமத்திற்கமைய இங்கு IV ஆம் அட்டவணைக்கு அமைவாக தயாரிக்கப்பட்ட பதிவேட்டில் பதிவு செய்தல் தவிசாளர் அல்லது அதிகாரம் பெற்ற அலுவலரின் பணியாதல் வேண்டும். இப்பதிவேடு விண்ணப்பப்பத்திரங்களைப் பொறுப்பேற்கும் ருவன்வல்லை பிரதேச சபை அலுவலகத்தால் பேணப்படுதல் வேண்டும்.

19. ஏதேனும் காரணத்தின் பேரில் தகனம் செய்வதற்காக பூதவுடலைப் பொறுப்பேற்காவிடின், தவிசாளர் அல்லது அதிகாரம் பெற்ற அலுவலர் அதற்கேதுவாக அமைந்த காரணங்களுடன் அதுபற்றி உடனடியாக விண்ணப்பதாரருக்கு எழுத்துமூலம் அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் ருவன்வல்லை பிரதேச சபையின் பணியாதல் வேண்டும்.

20. எவரேனும் விண்ணப்பதாரியால் அல்லது அவருடைய அதிகாரம் பெற்ற பிரதிநிதியால் பொறுப் பேற்கப்படாத அஸ்தியை தகன நிலைய வளவினுள் அல்லது ஏதேனும் மயானத்தில் புதைப்பதற்கான நடவடிக்கைகளை ஏற்பாடு செய்தல் தவிசாளர் அல்லது அதிகாரம் பெற்றஅலுவலரின் பணியாதல் வேண்டும்.

21. பூதவுடலை அடக்கம் செய்வதற்கு உகந்த நிலையில் தகன நிலையத்தைப் பராமரித்துக் கொண்டு நடாத்துதலும் தவிசாளர் பணியாதல் வேண்டும்.

22. ஏதேனும் தகன நிலையத்தின் புனரமைப்பு அல்லது பராமரிப்பு கருமத்திற்காக அத்தகைய தகன நிலையத்தை மூடிவைப்பதாயின், அது பற்றிய அறிவித்தலொன்றை மூன்று மொழிகளிலும், பூதவுடல்கள் தகனம் செய்வதற்கு அனுமதிப்பத்திரம் வழங்கும் அலுவலகத்திலும் தகன நிலைய வளவினுள் பிரவேசிக்கும் இடத்திலும் தெளிவாகப் புலப்படக்கூடிய விதத்தில் காட்சிக்கு வைத்தல் தவிசாளரின் பணியாதல் வேண்டும்.

23. ஏதேனும் பூதவுடலொன்றைத் தகனம் செய்வதற்காக தகன நிலையத்திற்கு பொறுப்பேற்றதன் பின் தகனம் செய்யும்போது அல்லது தகனம் செய்வதற்கு முன் அல்லது தகன நிலைய இயந்திராதிகளில் இயந்திரக் கோளாறுகள் அல்லது மின் துண்டிப்பு ஏற்படுவதன் மூலம் பூதவுடலைத் தகனம் செய்வதற்கு இயலாது போகுமிடத்து குறித்த பூதவுடலை நல்லடக்கம் செய்தல் அல்லது தகனம் செய்வதற்காக பிரிதொரு தகனம் செய்யுமிடத்திற்கு அனுப்பும் அதிகாரம் தவிசாளருடையதாகும். தீர்மானிப்பதற்கான அதிகாரம் தவிசாளருக்கு உரியதாகும்.

அதிகாரத்தைக் கையளித்தல்.

24. இத்துணை விதிகளுடன் தொடர்பான நடவடிக்கைகளை ஊகித்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் தொடர்பாக பிரதேச சபைக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தினை குறித்த தவிசாளரினால் சபையின் எவரேனுமொரு அலுவலருக்கு எழுத்து மூலம் கையளித்தல் சட்டபூர்வமானதாகும்.

பரிசீலனை செயல் முறை மற்றும் மேற்பார்வை.

25. பரிசீலனை செய்யும் அலுவலர் பிரதேச சபையின் தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் ஆவர்

முறைப்பாடுகள் மற்றும் தீர்வுப் பொறி முறை.

26. இத்துணை விதிகளை அவமதித்தல் அல்லது மீறுதல் இடம்பெறும் அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் பிரதேச சபைத் தவிசாளருக்கு அல்லது சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு எழுத்து மூலம் அல்லது வாய்மூலமாக எச்சந்தர்ப்பத்திலேனும் அறிக்கைப்படுத்தல் அல்லது முறைப்பாடு செய்தல் எப்பிரசைக்கும் மேற்கொள்ளலாம். அவ்வாறான அனைத்து முறைப்பாடுகள் தொடர்பாகவும் பிரதேச சபையின் தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் பரிசீலனை செய்தல் வேண்டும்.

மேற்பார்வை.

27. இத்துணை விதிகளில் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளை செயற்படுத்துதல் தொடர்பாக பரிசீலனை மேற்கொள்ளல் அல்லது மேற்பார்வை செய்யும் அதிகாரம் பிரதேச சபையின் தவிசாளர் அல்லது அவரினால் அதிகாரமளிக்ககப்பட்ட அலுவலருடையதாகும்.

துணை விதிகளை மீறுதல்.

28. இத்துணை விதிகளில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளில் ஒன்றை அல்லது சிலதை அல்லது அனைத்தையும் மீறுதல் தவறாகும்.

தண்டமும் அபராதமும்.

29. இத்துணை விதியில் உள்ளடக்கப்பட்டுள்ள எவையேனுமொரு பிரிவினை மீறுதல் குற்றமாவதுடன், எவரேனும் ஒருவர் தகுந்த அதிகாரமுள்ள நீதிமன்றமொன்றின் மூலம் குற்றத்திற்கு குற்றவாளியாக்கப்பட்டதன் பின் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122(2) ஆம் பிரிவின் பிரகாரம் விதிக்கப்பட்டுள்ள தண்டத்தின் மூலமும் குற்றவாளியாக்கப்பட்டதன் பின்பும் குறித்த தவறை தொடர்ந்தும் புரிந்தால் குறித்த காரணத்தின் மீது கவனம் செலுத்தி பிரதேச சபையின் தவிசாளர் அல்லது செயலாளர் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட பிறிதொரு அலுவலரினால் எழுத்து மூல அறிவித்தல் ஒன்றை வழங்கியதன் பின்பும் குறித்த தவறைப் புரிகின்ற ஒவ்வொரு தினத்திற்கும் 1897 ஆம் ஆண்டின் 15 இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122(2) ஆம் பிரிவிற்கு ஏற்ப விதிக்கப்பட்டுள்ள மேலதிகத் தண்டத்திற்கு உட்படுதல் வேண்டும்.

அர்த்தமும் சொற் பொருள் விவரிப்பும்.

30. பதங்கள் சம்பந்தமாக வேறு பொருள்கோடல் அவசியப்பட்டாலேயொழிய இப்பகுதிக்கான துணைவிதிகளில் -

(அ) "தகனநிலைய கூடம்" என்பது, தகனம் செய்வதற்காக பூதவுடல் வைக்கப்படுகின்ற கூடமும் அத்தகைய கூடத்திற்கு வெளியே அமைக்கப்பட்டுள்ள வெளிக்கூடமும்.

(ஆ) "தகன நிலைய வளவு" என்பது, முழு தகன நிலையமும் அதற்குச் சொந்தமான பூமியும்.

(இ) "தகன நிலையத்தின் பொறுப்பாளி" என்பது அப்போதைக்கு ருவன்வல்லை பிரதேச சபையின் தகன நிலையத்திற்கும் அதன் நடவடிக்கைகளுக்கும் பொறுப்பாக இருப்பதற்கு நியமிக்கப்பட்டுள்ள எவரேனும் ஊழியரும்.

(ஈ) "அஸ்தி" என்பது ஏதேனும் பூதவுடல் தகனம் செய்யப்பட்ட பின்னர் பூதவுடலினதும் அது வைக்கப்பட்ட பெட்டியில் ஏதேனும் எரியாது எஞ்சிய பொருட்களும்

(உ) "பூதவுடல்" என்பது மரணமடைந்த எவரேனும் ஆளுடைய முழு பூதவுடல் அல்லது உயிரற்றுப் பிறந்த குழந்தையின் பூதவுடல் அல்லது பூதவுடலின் ஏதேனும் பாகம் பூதவுடலாகக் கருதப்படல் வேண்டும்.

31. இத்துணை விதியில் தமிழ் மற்றும் ஆங்கிலப் பிரதிகளில் பொருத்தமற்ற ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் சிங்களப் பிரதி வலுவுள்ளதாய் இருத்தல் வேண்டும்.

## I ஆம் அட்டவணை

தகன நிலையத்தை உபயோகிப்பதற்காக அறவிடப்படுகின்ற கட்டணங்கள்

| விபரம் | | ரூபா சதம் |
|---|---|---|
| 01. அதிகாரப் பிரதேசத்தினுள் வசித்த ஒருவரின் பூதவுடலை தகனம் செய்வதற்கு | - | 6,000.00 |
| 02. அதிகாரப் பிரதேசத்திற்கு வெளியில் வசித்த ஒருவரின் பூதவுடலை தகனம் செய்வதற்கு | - | 7,000.00 |

## II ஆம் அட்டவணை

ருவன்வல்லை பிரதேச சபையின் தகன நிலையத்தில் பூதவுடலொன்றைத் தகனம் செய்வதற்கான விண்ணப்பம்

1. பூதவுடலை தகனம் செய்வதற்காக விண்ணப்பிப்பவரின் பெயர் :- ..............................................................................

   - முகவரி :- ..............................................................................
   - தேசிய ஆள்அடையாள அட்டை இல. :- ..............................................................................
   - தொலைபேசி இலக்கம் :- ..............................................................................
   - மரணித்தவருக்கும் விண்ணப்பதாரிக்குமிடையிலான தொடர்பு :- ..............................................................................

2. மரணித்தவரின் பெயர் :- ..............................................................................

   - தேசிய ஆள் அடையாள அட்டை இல. :- ..............................................................................
   - வதிவிட முகவரி :- ..............................................................................
   - கிராம அலுவலர் பிரிவு :- ..............................................................................

3. மரணம் ஏற்பட்ட விதம் :- ..............................................................................

4. இறப்புச் சான்றிதழ் இலக்கமும் திகதியும் :- ..............................................................................
   (இறப்புச் சான்றிதழின் பிரதியொன்றை இணைத்தல் வேண்டும்)

5. மரணத்தைப் பதிவு செய்த பதிவாளரின் பெயர் மற்றும் முகவரி:- ..............................................................................

6. மரணம் தொடர்பாக விசாரணையொன்று நடாத்தப்பட்டிருப்பின் :- ..............................................................................
   திகதி மற்றும் நேரம்

   - விசாரணை உத்தியோகத்தரின் பெயரும் பதவியும் :- ..............................................................................
   - விசாரனை உத்தியோகத்தரின் முடிவு :- ..............................................................................
   - பூதவுடலை தகனம் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டதா என ஆம்/இல்லை :- ..............................................................................

7. தகனம் செய்வதற்குத் தேவையான திகதி மற்றும் நேரம் :- திகதி ........................................
நேரம் ........................................

8. தகனம் செய்ததன் பின் அஸ்தியை வைப்புச் செய்வதற்காக பெயர் மற்றும் முகவரி எழுதப்பட்ட பாத்திரமொன்று வழங்கப் பட்டுள்ளது / வழங்கப்படவில்லை.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்துத் தகவல்களும் சரியானவை மற்றும் உண்மையானவை என அத்தாட்சிப் படுத்துகின்றேன்.

சம்பந்தப்பட்ட சான்றிதழ்கள் இணைக்கப்பட்டுள்ளன.

திகதி : ........................................ விண்ணப்பதாரியின் கையொப்பம் : .............................

**அலுவலக உபயோகத்திற்காக மட்டும்**

01. அனுமதிப்பத்திரத்தை வழங்குவதை அங்கீகரிக்கின்றேன் / கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் காரணமாக அனுமதிப் பத்திரம் வழங்குதலை நிராகரிக்கின்றேன்.

....................................................................................................................................................................
....................................................................................................................................................................
....................................................................................................................................................................

தவிசாளர்,
ருவன்வல்லை பிரதேச சபை.

அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்,

01. இடாப்பில் பதியப்பட்டது ...................................................... திகதி முதல் ...................................................... இலக்க பற்றுச் சீட்டின் மூலம் அறவிடப்பட்டது.

02. அனுமதிப்பத்திரத்தை கையொப்பத்திற்காக சமர்ப்பிக்கின்றேன்.

03. வேண்டுகோள் நிராகரிக்கப்படுவதற்குக் காரணமாயின் சம்பந்தப்பட்ட விடயங்களை உள்ளடக்கிய கடிதத்தை கையொப்பத்திற்காக சமர்ப்பிக்கின்றேன்.

திகதி :- ..................................................

........................................................
கையொப்பம்.

# III ஆம் அட்டவணை

ருவன்வல்லை பிரதேச சபையின் தகனம் செய்யுமிடத்தில் தகனம் செய்யப்பட்ட பூதவுடல்கள் தொடர்பான இடாப்பு

| தொடர் இலக்கம் | மரணித்தவரின் பெயர் | தேசிய ஆள் அடையாள அட்டை இல. | பால் | அனுமதி இடாப்பில் தொடர் இலக்கம் | மரணித்த திகதி | இறப்புச் சான்றிதழ் | | விண்ணப்பதாரியின் | | அனுமதிப்பத்திர இலக்கம் | பற்றுச் சீட்டு | | | தகனம் செய்யப்பட்ட | | அஸ்தி எடுத்துச் செல்லப்பட்ட திகதி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | இலக்கம் | திகதி | பெயர் | தே. ஆ. அ. அ. இலக்கம் | | இலக்கம் | தொகை | | திகதி | நேரம் | |
| | | | | | | | | | | | | ரூ. | ச. | | | |
| 01. | | | | | | | | | | | | | | | | |
| 02. | | | | | | | | | | | | | | | | |
| 03. | | | | | | | | | | | | | | | | |
| 04. | | | | | | | | | | | | | | | | |

## IV ஆம் அட்டவணை

ருவன்வல்லை பிரதேச சபையின் தகனம் செய்யுமிடத்தில் பூதவுடல்களைத் தகனம் செய்வதற்கு வழங்கப்படுகின்ற அனுமதிப்பத்திரங்கள் தொடர்பான இடாப்பு

| தொடர் இலக்கம் | மரணித்தவரின் பெயர் | தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் | பால் | மரணித்த திகதி | இறப்புச் சான்றிதழ் பதிவு செய்யப்பட்ட | | விண்ணப்பதாரியின் | | | | நீதிவான் / திடீர் மரண விசாரணை அதிகாரியின் கட்டளை | | அனுமதிப்பத்திர இலக்கம் | பற்றுச் சீட்டு | | | தகனம் செய்வதற்காக ஒதுக்கப்பட்ட | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | இலக்கம் | திகதி | பெயர் | மரணித்தவருடனான உறவு | முகவரி | தே. ஆ. அ. இலக்கம் | கோவை இலக்கம் | திகதி | | இலக்கம் | தொகை ரூ. | ச. | திகதி | நேரம் |
| 01. | | | | | | | | | | | | | | | | | | |
| 02. | | | | | | | | | | | | | | | | | | |
| 03. | | | | | | | | | | | | | | | | | | |
| 04. | | | | | | | | | | | | | | | | | | |

10-312